
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 மே 2002 இதழ் - 5



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

© 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

### தொடர்பு முகவரி

தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா

குறிப்பு :- M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | எசேக்கியேல் ஒரு கண்ணோட்டம் | 10 |
| 3. | ஜெபித்த உங்களுக்கு நன்றி | 11 |
| 4. | புதிய ஏற்பாட்டு ஆராதனை... | 12 |
| 5. | பெண்கள் பகுதி | 15 |
| 6. | வாலிபர் பகுதி | 18 |
| 7. | சிறுவர் பகுதி | 22 |
| 8. | வெளிப்படுத்தின விசேஷம் | 24 |
| 9. | புதிய ஏற்பாட்டு இரட்சிப்பின்... | 31 |

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

Editor
S.Rajanayagam

Honorary Editor
J.C.Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testment Chirstianity*

**Vol.16. May - 2002 Issue-5**


ஆசிரியர் உரை

## "உங்களுக்கும் வெகு வருத்தமா?"

உங்களுக்கும் வெகு வருத்தமா? என்று கேட்கும் போதே நம் எல்லோருக்கும் ஒரு காரியம் மிக நன்றாக விளங்கும். எதுவோ, யாருக்கோ, எங்கோ, எப்போதோ, மிக வருத்தமாக இருந்துள்ளது என்பது, நான் சொல்லும் இந்த "வருத்தம்". பழைய ஏற்பாட்டிலுள்ள இராஜாக்களின் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. நம்முடைய தமிழ் வேதாகமத்தில் "வருத்தம்" என்ற வார்த்தை தான் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால், இதே வார்த்தைக்கு, ஆங்கில வேதாகமத்தின் வேறுபட்ட மொழியாக்கங்கள் "மிக அதிகம்" "வெகு வருத்தம்" "வெகுதூரம்" என்ற வித்தியாசமான வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளது.

சரி இப்பொழுது தமிழ் வேதாகமத்தில், இவ்வார்த்தை இடம் பெற்றுள்ள வசனத்தைக் கவனியுங்கள். "ஆகையால், ராஜாவானவன் யோசனை பண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக் குட்டிகளை உண்டாக்கி ஜனங்களைப் பார்த்து நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம், இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப் பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி, ஒன்றை பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான் இந்தக் காரியம் பாவமாயிற்று" - (I. ராஜா 12:28-30)

இந்த வசனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள, இதன் பின்னணியைத் தெரிந்து கொள்வது மிக அவசியமானதால், அது குறித்து கொஞ்சம் உங்களுக்கு விளக்குகிறேன்.

தேவன் கொடுத்த அளவில்லாத ஞானத்தை, அந்தத் தேவனுக்குப் பிரியமாக பயன்படுத்தாமல், மதிகெட்டு, மக்கு மனைவிகளின் மந்திரப் பேச்சில் மயங்கி, விக்கிரகங்களின் பின்னால், ஒரு வாயில்லா பூச்சியைப் போல, மௌனமாக பவனி வந்த (I. ராஜா 11:5-10) ராஜாவாகிய சாலமோனின் நாட்களுக்குப் பிறகு தேவனால் பராமரிக்கப்பட்டு வந்த ஒன்றுபட்ட இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கு, தெற்கு என்று பிளவுபட்டுப் போயிற்று.

இப்பிளவுக்கு காரணம் ஞானத்தந்தையாகிய சாலமோனுக்குப் பிறந்த மூட மகன் ரெகொபெயாம் தான். சாலமோனின் மறைவிற்குப் பிறகு அவனுடைய மகன் ரெகொபெயாமை ஒரே ஒரு நியாயமான நிபந்தனையினடிப்படையில் ராஜாவாக ஏற்றுக் கொள்ள ஜனங்கள் தயாராகவே இருந்தார்கள் (12:1-4) அந்த நிபந்தனை, எல்லாக் குடிமக்களும், ஒரு ராஜாவினிடத்தில் எதிர்பார்க்கின்ற ஒன்று தான் "நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள் மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்: அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள் (12:4)

ஆனால், இந்த ரெகொபெயாம் ஆலோசனை என்ற பெயரில் சில நாட்களை இழுத்தடித்து, இறுதியில் முதியோருடைய வார்த்தைக்கு முழுக்குப் போட்டுவிட்டு, வாலிபருடைய ஆலோசனைக்கு அடிமைப்பட்டு, ஜனங்கள் ஆத்திரப்படும் கடின வார்த்தைகளைப் பேசினபடியால், பெரும்பாலான இஸ்ரவேலர் அவனிடமிருந்து பிரிந்து போனார்கள் (12:12-19) ஒருவேளை பிரிந்து போனது தேவச்சித்தமாக இருந்தாலும், இந்த ஞானியின் மகன் இதற்குக் காரணமாயிருந்திருக்கத் தேவையில்லையென்றே தோன்றுகிறது. ஒருவேளை, இவன் புத்தியாய் நடந்திருந்தால், இதைத் தவிர்த்திருக்கலாமோ?

இப்படி, இந்த ரெகொபெயாம் என்ற ஒரு தனி மனிதன் மீது ஏற்பட்ட கோபத்தினால், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார். ரெகொபெயாமின் தலைமையை ஏற்க மறுத்து, ஒரு காலக்கட்டத்தில், சாலமோன் ராஜாவினிடத்தில் கலகம் செய்து ஓடிப்போன (11:40) யெரொபெயாமை, தங்களுக்கு ராஜாவாக ஏற்படுத்திக் கொண்டு தனியாகப் பிரிந்து போனார்கள். தனிப்பட்ட மனிதன் மீது ஏற்பட்ட

பெருங்கோபம் அவர்கள் கண்களை முற்றிலுமாக மறைத்தபடியால், தங்கள் ராஜாவை மாத்திரமல்ல, தேவனால் கொடுக்கப்பட்ட பட்டணமாகிய எருசலேமை தங்கள் ஆன்மீக வாழ்வுக்கு அடித்தளமாக இருக்கும் எருசலேமை விட்டுப் போகிறோம் என்பது அவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாமல் போய்விட்டது. தாங்கள் செய்யும் மிகப்பெரிய தவறையும், அதனால் ஏற்படும் கடும் விளைவுகளையும் அப்பொழுது அவர்கள் அறியாமலிருந்தார்கள்.

இஸ்ரவேலருடைய வாழ்க்கையில் எருசலேம் என்பது முக்கியமானது மட்டுமல்ல. அது அவர்களுடைய வாழ்க்கையில் இரண்டறக்கலந்த ஒன்று. எருசலேம் இஸ்ரவேலருக்குத் தலை நகரமாகவும், ஆட்சிக் கட்டிலின் பீடமாகவும் ஆன்மீக வாழ்க்கையின் மையமாகவும், வழிபாட்டுத்தலமாகவும் இருந்தது. எருசலேம் மகாராஜாவின் நகரமென்றும் அழைக்கப்பட்டுள்ளது (மத்5:35) இந்த எருசலேமை நோக்கித்தான் தானியேல் தினமும் மூன்று வேளை ஜெபித்தான்.(தானி 6:10) இந்த எருசலேமின் பாழ்பட்ட நிலையைக் கேள்விப்பட்டுத்தான் சூசான் அரண்மனையில் ஊழியம் செய்த நெகேமியா துக்கம் தாளாமல் உபவாசித்து அழுதான் (நெகே.1:4) ஒட்டுமொத்த இஸ்ரவேலருக்கும் எருசலேமின் மீதிருந்த பற்றை சங்கீதத்தில் நாம் காண முடியும் "எருசலேமே, நான் உன்னை நினையாமலும் எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல் வாயோடே ஒட்டிக் கொள்வதாக" (சங் 137:5,6)

இவ்வளவு மகத்துவமான எருசலேமை விட்டுத்தாங்கள் போகிறோம் என்பது கூட தெரியாமல், அந்த இமாலயத்தவறு கோபத்தினாலும் ஒரு வேகத்தினாலும் நடந்து விட்டது. கோபமும், விவேகமற்ற வேகமும் இவர்களை எந்தளவுக்கு மோசம் போக்கினது தெரியுமா? தொடர்ந்து படியுங்கள்.

இங்கே, ஜனங்கள் தன்னைத் தகுதியினடிப்படையில் ராஜாவாகத் தெரிந்தெடுக்கவில்லையென்பதை கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட அதிர்ஷ்ட ராஜாவாகிய ரெகொபெயாம், ஜனங்களைத் தொடர்ந்து தன் வசமே வைத்திருக்கத் தேவையான திட சிந்தனையிலும் அதிரடித் திட்டத்திலும் இறங்கினான். எருசலேமை ஜனங்கள் மனப்பூர்வமாக விட்டு வரவில்லையென்பதையும் அவன் மிக நன்றாக அறிந்திருந்தான். ஜனங்கள் தங்களுடைய மார்க்கக் கடமைகள் நிறைவேற்ற எருசலேமுக்குப் போக்கும் வரத்துமாக இருப்பது. தனது பதவி சுகத்திற்கு ஆபத்தாகிவிடுமென்று எண்ணி, தன்னுடைய

எல்லைக்குள்ளே, எருசலேமின் மாதிரியின்படியே ஒரு பொய் மார்க்கத்துக்கு ஏற்பாடு செய்தான் (12:28).

தனது சொந்த லாபத்திற்காகவே முற்றிலுமாக பொய் மார்க்கத்தை உண்டு பண்ணின யெரொபெயாம் அதன் முழு உண்மையையும் மறைத்து "நீங்கள் எருசலேமுக்குப் போவது உங்களுக்கு வருத்தம்" என்று கூறி பழைய ஏற்பாட்டின் மிகப் பெரிய பொய்களில் ஒன்றை கூசாமல் கூறினான். "எருசலேமுக்குப் போவது ஜனங்களுக்கு வருத்தமாம்" எப்படி என்று பார்த்தீர்களா?

உண்மையில் அது யெரொபெயாமுக்குத் தான் வருத்தம். அவனது பதவிக்கு, புகழுக்கு, சொகுசு வாழ்க்கைக்கு, வருமானத்துக்கு, அந்தஸ்த்துக்கு என்று அவனுக்குத்தான் நஷ்டம். ஆனால், தன்னலத்திற்காக, ஒரு தேசத்து ஜனங்களை தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களை, தேவனை அறிந்த ஜனங்களை, தேவனுக்கு ஓரளவாவது பயப்படுகிற ஜனங்களை வெகுவாக மோசம் போக்கினான். எருசலேமுக்குப் போகவிடாமல், சதி செய்து தடை ஏற்படுத்தினதுமல்லாமல், என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம் என்று சொன்ன தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக விக்கிரகங்களை உண்டு பண்ணி (12:28) ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றை தாணிலும் ஸ்தாபித்தான் (2:29) தாணும், பெத்தேலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள பட்டணங்கள் அதாவது யூதாவிலுள்ள ஒரு எருசலேமுக்குப் பதிலாக, இஸ்ரவேலில் இரண்டு எருசலேம்களை உண்டாக்கினான். ஜனங்கள் மீது எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

இன்னும் தேவனால் தன்னுடைய ஊழியத்திற்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட லேவி கோத்திரத்தாரை ஆசாரியர்களாக இருக்க தொடர்ந்து அனுமதித்தால், ஒரு வேளை அவர்கள் காலப் போக்கில், யெகோவா வணக்கத்திற்கு வழி நடத்தி விடுவார்கள் என்று அஞ்சி, அவாகளைப் புறக்கணித்து, அவர்கள் ஊரைவிட்டே ஓடிப்போகும்படி செய்து (II நாளா 13:9) ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியர்களாக ஏற்படுத்தினான் (வ.32) மேலும் எருசலேமில், தேவனால் நியமித்து, கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கொப்பாக, பண்டிகை நாட்களை தன் மனதில் தானே நியமித்து ஏற்படுத்தினான். (வ.33)

தனக்காக மாத்திரம் இவையனைத்தையும் செய்துவிட்டு, ஜனங்களுக்காகவே எல்லாவற்றையும் செய்ததைப் போல பாசாங்கு காட்டி, "நீங்கள் எருசலேமுக்குப் போவது உங்களுக்கு வருத்தம்" என்று பசப்பு வார்த்தைகளைக் கூறி, அதில் வெற்றியும் பெற்றுவிட்டான்.

இவன் செய்த காரியம் அனைத்தும் இவனுக்கு நன்றாகவே பட்டது. ஜனங்களுக்கும் பிரியமாயிருந்தது. ஆனால் "இந்தக் காரியம் பாவமாயிற்று" என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது (12:30) இப்படி பாவமான இந்தக் காரியத்தில் சிக்கிக்கொண்ட இஸ்ரவேலின் பின் சரித்திரம் உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தேவனைவிட்டு விலகி, முற்றிலும் விக்கிரக வணக்கத்தில் மூழ்கி, யெகோவாவுக்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். அதன் விளைவு? ஆன்ம வாழ்விலே அழிந்து போனதோடல்லாமல், சரீர வாழ்விலும் எதிரிகளுக்கு அடிமைப்பட்டு, கி.மு.722 முதல், சரித்திரத்தின் பக்கங்களிலிருந்தே மாயமாக மறைந்துவிட்டார்கள். பரலோகத்தின் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு நேர்ந்த கதியைக் கவனித்தீர்களா?

சரி, நாம் பார்த்த இந்த சரித்திர நிகழ்வுகளை அப்படியே நெஞ்சில் நிறுத்தி, நம்முடைய நாட்களிலிருக்கும் கிறிஸ்துவ மார்க்கத்தை, அப்படியே உற்றுப் பார்த்தால், ஒரு வேளை நாம் யெரொபெயாமின் காலத்தில் தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம் வலுவாக ஏற்படுகிறது. கிட்டத்தட்ட அதையொத்த சம்பவங்கள் அப்படியே நிகழ்கிறது. இஸ்ரவேல் மக்கள் மெய் வணக்கத்திலிருந்து விலகி, ஒன்றுமில்லாமல் போனதுபோல், கிறிஸ்தவ சமுதாயமும் மெய்ப்பக்கத்திலிருந்து தடம் புரண்டு நித்தியத்தை இழந்து போகுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

ஆகவே இதை வாசிக்கும் நாம் நம்முடைய ஆன்மீக வாழ்வில் ஒன்றுமில்லாமல் போய்விடாமலிருக்க இதிலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வது அவசியம்.

## 1. எருசலேமும், எருசலேம் சுவிசேஷமும்

முதலாவது எப்படி பழைய ஏற்பாட்டின் நாட்களில் இஸ்ரவேலருக்கு எருசலேம் ஒரு முக்கிய இடமாக இருந்ததோ அதைப் போலவே இன்றைக்கு கிறிஸ்துவர்களாக வாழ விரும்புபவர்களுக்கும் எருசலேம் ஒரு வகையில் முக்கியமானதாகவே உள்ளது. இங்கே, எருசலேம் ஒரு புனித ஸ்தலம் என்று நான் நிச்சயமாக சொல்லவில்லை. இருப்பினும் எருசலேமுக்கும் புதிய ஏற்பாடு உபதேசத்தின்படி வாழ விரும்புவர்களுக்கும் ஒரு உறவு இருக்கவே செய்கிறது. இவ்வுண்மையை யாரும் மறுக்க முடியாது.

புறஜாதியானாயிருந்த கொர்நெலியுவும், அவன் வீட்டாரும்

இரட்சிக்கப்பட்ட சம்பவத்தை எருசலேமிலிருந்த யூதர்களுக்கு பேதுரு அப்போஸ்தலன் விவரித்து சொன்னபோது (அப்.11அதி). "ஆதியிலே" என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார் (வ.15) அதாவது, "எருசேலமில்" நடந்தது போலவே என்று குறிப்பிட் டுள்ளதை கிறிஸ்தவத்தோடும், கிறிஸ்தவர்களோடும் சம்பந்தப்பட்ட அநேக காரியங்கள் எருசலேமில் ஆரம்பமானவை தான்.

இயேசுகிறிஸ்து 12 சீஷர்களை எருசலேமில் காத்திருங்கள் என்று தான் கட்டளையிட்டார். எருசலேமில்தான் முதல் சுவிசேஷப் பிரசங்கம் பேதுருவால் செய்யப்பட்டது எருசலேமிலிருந்து தான் "இரட்சிப்பின் திட்டம்" வெளியானது எருசலேமில் தான் முதன் முதலாக "இயேசுவின் நாமத்தில்" ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. எருசலேமில் தான் "சுவிசேஷத்திற்கு மக்கள் முதன் முதலாகக் கீழ்ப்படிந்தார்கள்". எருசலேமில்தான், "கிறிஸ்துவின்சபை" ஆரம்பமாயிற்று "முதல் ஆராதனை" எருசலேமில் தான் நடைபெற்றது. வாரம்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய "கர்த்தரின் பந்தி" எருசலேமில் தான் தொடங்கியது. மொத்தத்தில் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கான தேவச்சித்தம் முழுமையாக எருசலேமில் தான் வெளிப்பட்டது.

அப்போஸ்தலர் - 2 ன்படி இவ்வளவு காரியங்கள் எருசலேமில் நடந்துள்ளபடியால், சுவிசேஷத்தை நாம் "எருசலேம் சுவிசேஷம்" என்று சொன்னாலும் தவறில்லை என்றே எண்ணுகிறேன். எருசலேம் சுவிசேஷம் என்பது கண்டிப்பாக வேறொரு சுவிசேஷம் அல்ல. ஏதோ, இது புதிது என்று நினைத்துக் கொள்ள வேண்டாம் பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் பவுலும் பிரசங்கித்த அதே சுவிசேஷம் தான்.

ஆனால், அருமையானவர்களே இன்றைக்கு இந்த சுவிசேஷம் ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்டுகிறதா? பேதுருவினால் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கிக்கப்பட்ட இரட்சிப்பின் மாதிரி இன்று ஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிறதா? எருசலேம் சுவிசேஷத்தின் படியாக ஒருவன் சபைக்குள் வருகிறானா? அதே மாதிரியின் படியாக ஒருவன் இன்று தேவனை ஆராதிக்கிறானா? ஆராதனையின் ஒவ்வொரு பங்கும் எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியின்படி உள்ளதா? "எந்த மாதிரி" இன்றைய கிறிஸ்துவச் சமுதாயத்தால் பின்பற்றப்படுகிறது? வருந்தத்தக்க காரியமென்னவென்றால் மிகப்பெரும்பான்மையான கிறிஸ்தவ சமுதாயம், எருசலேம் சுவிசேஷத்தின மாதிரியைக் கடைபிடிப்பதுமில்லை. அதன்படி வாழ்வதுமில்லை நீங்கள் எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியின் படியாக வாழாவிட்டால் அது அழிவுக்குத்தான் வழிவகுக்கும் என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம்.

## 11. யெரொபெயாமும், கிறிஸ்துவமதத் தலைவர்களும்

இரண்டாவதாக, கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் அநேகர் ஏன் எருசலேம் சுவிசேஷத்தை பின்பற்றுவதில்லையென்ற இந்த இரகசியம் உங்களுக்கு விளங்குகிறதா? விளங்காவிட்டால் கவனியுங்கள் அன்றைக்கு வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் ஜனங்கள் ஆவிக்குரிய ரீதியில் பாழ்பட்டுப் போக ஒரே ஒரு யெரொபெயாம் தான் இருந்தான். ஆனால் இன்றோ கிறிஸ்துவை நேசிக்கும் மக்கள் தங்கள் ஆன்ம வாழ்வில் மரித்துப் போக நாடுகள் தோறும், பட்டணங்கள் தோறும் ஏராளமான கிறிஸ்துவ மதத் தலைவர்கள் உள்ளனர். இவர்களின் அட்டகாசம் போதாதென்று ஊர் தோறும், ஏன் வீதிகள் தோறும் பொய்ப்போதகர்களும் மலிந்து கிடக்கின்றனர். எப்படி, அந்த ராஜா தன்னுடைய சொந்த லாபத்திற்காக ஜனங்களை எருசலேம் போகவிடாமல் தடுத்து பொய் மார்க்கத்தை ஏற்படுத்தினானோ, அதைப்போலவே ஏராளமாயிருக்கிற யெரொபெயாம்கள் ஜனங்களிடம் பேசி, “எருசலேம் சபைக்குப்” பதிலாக “பொய்ச்சபைகளையும்” பொய் உபதேசங்களையும் ஏற்படுத்தி வைத்துள்ளனர். அழிந்து போன அந்த யெரொ பெயமாகிலும் ஒரு எருசலேமுக்குப் பதிலாக, இரண்டு எருசலேம்களைத்தான் உண்டு பண்ணினான். ஆனால் இந்தப் போலி கிறிஸ்தவ மதத் தலைவர்களும், கள்ளப்போதகர்களும், ஒரு எருசேலம் சபைக்குப் பதிலாக ஏராளமான பொய்ச் சபைகளை உருவாக்கி வைத்துள்ளனர். கிட்டத்தட்ட 3,000 பிரிவுச் சபைகள் இருப்பதாக புள்ளி விபரம் கூறுகிறது.

எப்படி அந்த இஸ்ரவேலர் தங்கள் ராஜாவுடைய வஞ்சக வார்த்தைகளை நம்பி அவனுடைய கபட நாடகத்தை அறியாமல் அவனுடைய பொய் மார்க்கத்தின் உண்மை நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் அதிலே தங்களை ஈடுபடுத்தி, ஒரு பொய்ப்பக்தியி னடிப்படையில், பொய் சமாதானத்தைத் தேடிக்கொண்டார்களோ அதைப் போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும், தங்கள் சொந்த இலாபத்திற்கென்றே சகலவற்றையும் செய்யும் இந்த போலி மதத்தலைவர்கள் பின்னும் வரம் பெற்ற ஊழியர்களென்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்ளும் சில வேடதாரிகள் பின்னும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் வேறுபாடு தெரியாத அப்பாவி போதகர்கள் பின்னும் சென்று அவர்களின் விஷமத்தனமான உபதேசத்திற்கு தங்களை ஒப்புகொடுத்து பக்திப்பரவசம் பூண்டு,

இயேசுக்கிறிஸ்துவால் கடுமையாக சாடப்பட்ட பரிசேயர்களைப் போல் தங்களை ஒரு பெரிய பக்திமான்கள் என்று நினைத்து வாழ்ந்து கொண்டு உள்ளது.

எப்படி இஸ்ரவேல் ஜனங்கள் "எருசலேமுக்குப் போவது வருத்தம்" என்று ராஜாவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு எருசலேமுக்குப் போவதை சுத்தமாக புறக்கணித்தார்களோ, அதைப்போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும் தங்கள் மத தலைவர்களின் தந்திரப்பேச்சுக்கும் பொய் போதகர்களின் புளுகுக்கும் ஆவி என்ற பெயரால் முதலீடில்லா வியாபாரம் செய்யும் அற்புத வியாபாரிகளின் வசீகரபேச்சுக்கும் அடிமைப்பட்டு எருசலேம் சுவிசேஷமாகிய உண்மைச் சுவிசேஷத்தை ஒதுக்கி ஓரம்கட்டி விட்டனர். ஆகவே, அன்றைக்கு இஸ்ரவேலருக்கு எருசலேமுக்குப் போவது இன்று, எருசலேம் சுவிசேஷத்தைப் பின்பற்றுவரும், வருத்தமான காரியமாகவே இவர்களுக்கு உள்ளது.

## III. பொய் சபைகளும் தாணும்-பெத்தேலும்

இறுதியாக, தேவனால் கொடுக்கப்பட்ட, மாட்சிமை பொருந்திய எருசலேமுக்கு மாற்றாக எப்படி தாணும், பெத்தேலும் இருந்ததோ, அதைப் போலவே இயேசுகிறிஸ்துவால் இரத்தம் சிந்தி சம்பாதிக்கப்பட்ட அவருடைய மகிமை பொருந்திய சபைக்கு (எபே.5:27) மாற்றாக, சபை என்ற பெயரால் ஏராளமான தாண்களும் பெத்தேல்களும் உள்ளன. அவைகளில், உலகெங்கும் வியா பித்திருக்கிற ஒரு அமைப்பு, சபை என்ற பெயரால் "அரசாட்சி" செய்து கொண்டுள்ளது. அதிலிருந்து பிரிந்தவை அரசாட்சியோடு மருந்துக்கு கொஞ்சம் அருளாட்சியையும் சேர்த்து காரியமாற்றிக் கொண்டுள்ளது. அய்யோ! இவைகளின் ஆட்டம் பொறுக்க முடியவில்லையே இதிலிருந்து விடுதலை கிடைக்காதா என்று கிறிஸ்தவம் ஏங்கி கிடந்த வேளையில், விநோத கூட்டம் ஒன்று புற்றீசல் போல் எழும்பி வந்து வாயிலே நுழையாத ஏராளமான பெயர்களைத் தங்ளுக்குத் தரித்துக் கொண்டு ஆவி என்ற பெயரால் பேயாட்டம் போட்டு தேவனை உண்மையாய் நேசிக்கும் ஜனங்களை வெகுவாக மோசம் போக்கிக் கொண்டுள்ளது. நான் இப்படி கடுமையாக எழுதுவதற்கு என்னை மன்னிக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறேன்.

இதை வாசிக்கும் அருமை நண்பரே! கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்ப்போம். அன்று, இஸ்ரவேலருக்கு எருசலேமைக் காட்டிலும் தாணும், பெத்தேலும் சமீபத்திலிருந்து சந்தேகமில்லை. எருசலேமுக்குப் போவதைக் காட்டிலும் தாணுக்கும் பெத்தேலுக்கும் போவது சுலபமாக இருந்தது. சந்தேகமில்லை எருசலேமின் மாதிரியின படியே பண்டிகைகள் உட்பட அனைத்தும் தாணிலும் பெத்தேலிலும் கிடைத்தது. அதிலும் சந்தேகமில்லை எருசலேமுக்குப் போனால் கிடைக்கும் மன சமாதனமும்

தாணிலும், பெத்தேலிலும் கிடைக்கிற மாதிரி இருந்தது. இதிலும் சந்தேகமில்லை ஆனால் முடிவு?

அன்பான தேவப்பிள்ளைகளே! தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள், உங்கள் நிலையை சீர்தூக்கிப் பாருங்கள் உங்களை நீங்கள் தற்பரிசோதனை செய்து பாருங்கள், எனக்கும் எருசலேம் சுவிசேஷத்திற்குமுள்ள இடைவெளி எவ்வளவு என்று பாருங்கள், நீங்கள் எருசலேமுக்குப் போக விரும்பும்போது நீங்கள் அங்கே போக முடியாதபடி தடைகள் வரும். எப்படி இஸ்ரவேலில் தேவனுடைய பிரமாணங்களை அறிந்த ஆசாரியர்கள் துரத்தப்பட்டு ஈனமானவர்கள் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டு ஜனங்களை பொய்மார்க்கத்தில் வழி நடத்தினார்களோ அதைப்போல நீங்கள் இருக்கும் இடத்தில் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை முழுமையாக அறியாதவர்கள் உங்களுக்கு ஊழியர்களாக இருந்து உங்களை வழி நடத்தக் கூடும். அவர்கள் ஒரு போதும் நீங்கள் எருசலேம் சுவிசேஷத்தைப் பார்க்க அனுமதிக்கமாட்டார்கள். எப்படி இஸ்ரவேலின் ஆசாரியர்கள், இஸ்ரவேலின் ராஜாவுடைய கட்டளையை ஏற்று பொய்மார்க்கத்தில் ஜனங்களை வழி நடத்தினார்களோ, அது போலவே இந்த ஊழியர்கள் தங்கள் மதத் தலைவர்களின் கட்டளைக்குப் பயந்து உங்களைப் பொய்ச் சுவிசேஷத்தில் வழி நடத்திக் கொண்டிருக்கக் கூடும்.

ஆனால் அடுத்தவர்கள் மீது பழியைப் போட்டு நாம் நியாயத்தீர்ப்பில் தப்பித்துக் கொள்ள முடியாது என்பது உங்களுக்கு நினைவில் இருக்கட்டும். ஆம்! வழிநடத்தினவர்கள் மீதோ! மதத்தலைவர்கள் மீதோ பழி சுமத்தி நாம் தண்டனையிலிருந்து விலகிக் கொள்ள முடியாது. "தேவன் அவனவனுடைய கிரியை களுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" என்று வசனம் கூறுகிறது (ரோமர் 2:6).

ஆகவே, அன்பானவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் எருசலேம் சுவிசேஷத்தை அறியும் வாய்ப்பையும் அதன் மூலம் இயேசுக் கிறிஸ்து கட்டின ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையைத் (மத் 16:18) தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தையும் அந்த ஒரு சபைக்கு (எபே 4:4) உங்களைக் கீழ்படுத்தும் பாக்கியத்தையும் இந்தப் பூமியின் வாழ்க்கையில் பெற்றுக் கொள்வீர்களாக! ஒருவேளை, எருசலேம் சுவிசேஷத்தைக் கண்டுபிடித்து அதற்குக் கீழ்படிவது உங்களுக்கு வெகு வருத்தமாக இருந்தால் இஸ்ரவேலருக்கு கி.மு.722 உடன் யெகோவாவோடு இருந்த உறவு அறவே அற்றுப் போனது போல உங்களுக்கும் நியாயத்தீர்ப்புடன் பரலோகத்தின் தேவனோடு உள்ள உறவு முற்றிலும் மறைந்து போகும். ஆம் மறைந்தே போகும்.

S. ராஜநாயகம்.

# எசேக்கியேல் ஒரு கண்ணோட்டம்

I. காலம் : ஏறக்குறைய கி.மு.592-570
II. ஆசிரியர் : எசேக்கியேல் தீர்க்கன்.

இந்நூலைப் பற்றி

1. தேவன் எசேக்கியேலைத் தீர்க்கதரிசியாக அழைத்தபோது அவனுக்கு வயது சுமார் 30.

2. எசேக்கியேல் என்பதற்கு "தேவன் பெலப்படுத்துகிறார்" என்று அர்த்தமாம். அவன் திருமணமான ஒரு ஆசாரியனாக இருந்தான்.

3. இந்நூலில், தேவ ஜனங்களின் அடிமைத்தனம். அவர்களுடைய பாவத்தால் வந்தது தான் என்று தீர்க்கன் வலியுறுத்துகிறார்.

4. இந்நூலின் மிகப்பிரபலமான வசனங்கள், "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்", "மனந்திரும்புவது ஜீவனடையும் படியாக" (18:20, 33:7:16) என்பவை.

5. தானியேல் முதலாம் சிறையிருப்பில் பிடிக்கப்பட்டார் (கி.மு.605) எசேக்கியேல் இரண்டாம் முறை (598 கி.மு)வில் பிடிக்கப்பட்டார். 10,000 கைதிகளில் இவரும் ஒருவர் (II இரா 24:14) இவர் சிறைபிடிக்கப்பட்ட போது 25 வயதுடையவராக இருந்தார்.

6. சீக்கிரம் சிறையிருப்பிலிருந்து திரும்பிவிடலாம் என்று மக்களுக்கு இருந்த தவறான எண்ணத்தை உடைக்கவும் (எரேமியா 28:1-17) அதே சமயத்தில் இஸ்ரவேல் ஜனம் விடுதலை பெற்று வந்து மீட்டமைக்கப்படுவீர்கள் என்பதையும் உறுதியாக எடுத்துரைத்தார்.

இந்நூலின் செய்தி

1. பாவத்தை மிகுதியாக செய்யும் எந்த தேசமும் தேவனால் அழிக்கப்படும்.

2. முதல் 24 அதிகாரமும் இஸ்ரவேலின் தற்சமய அழிவை கூறுகிறது. அடுத்த 24 அதிகாரமும் எதிர்கால நம்பிக்கையை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

3. இந்நூலின் உலர்ந்த எலும்புகள் உயிரை அடையும் தரிசனம் மிகவும். பிரபலமான ஒன்று, அது இஸ்ரவேலின் மீட்பைப் பற்றி எடுத்துரைக்கிறது.

# ஜெபித்த உங்களுக்கு நன்றி!

மே 1-4 ஆகிய தேதிகளில் ஏலகிரி மலையில் நடந்த **வேனிற்கால வேதாகம முகாமிற்காகவும்**, திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கிற்காகவும் ஜெபித்த உங்களுக்கு நன்றி! நன்றி!

## *முகாம் பற்றிய சில - தகவல்கள்*

| | | |
|---|---|---|
| பங்கு கொண்ட நாடுகள் | - | 3 |
| பங்கு கொண்ட மாநிலங்கள் | - | 4 |
| பங்கு கொண்ட மாவட்டங்கள் | - | 14 |
| பங்கு கொண்ட நகரங்கள் | - | 25 |
| பங்கு கொண்ட பிராந்திய சபைகள் | - | 38 |
| பங்கு கொண்ட மொத்த நபர்கள் | - | 415 |
| ஞானஸ்நானத்தின் மூலம் புதிய ஏற்பாட்டு நற்செய்திக்கு கீழ்ப்படிந்தவர்கள் | - | 8 |
| புதிய அங்கத்தினர்களால் பயனடைந்த பிராந்திய சபைகள் | - | 4 |

இம்முகாமின், தேவைகள் சந்திக்கப்பட தாராளமாய் பொருளாதார உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றி சொல்கிறோம். தொடர்ந்து ஊழியங்களுக்காய் ஜெபியுங்கள்.

- ஆசிரியர்.

# புதிய ஏற்பாட்டு ஆராதனை

புதிய ஏற்பாடு மூன்று வகையான ஆராதனையை குறித்து பேசுகிறது. முதலாவதாக அறியாமையின் ஆராதனை. விக்கிரகங்களை விழுந்து பணிந்து கொண்டமையால், அவர்களின் ஆராதனை அறியாமையானது என்று மார்ஸ் மேடையில் கூடி வந்தக் கூட்டத்தாரிடம் பவுல் கூறினார். (அப்போஸ்தலர் 17:22-23) இரண்டாவதாக, வீணான ஆராதனை இது மனித உபதேசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளமையால், வீணான ஆராதனையாகும். கிறிஸ்து சொன்னார், "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான். என்றார்". (மத்தேயு 15:9). மூன்றாவதாக உண்மையான ஆராதனை இப்படிப்படட ஆராதனையையே தேவன் விரும்புகிறார். கிறிஸ்து இதை வலியுறுத்தி, "தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்." (யோவான் 4:24). தேவனையே நோக்கி நாம் தொழுகை செய்ய வேண்டும் என்பதைக் கவனிக்கவேண்டும். அவர் நம்மை பலவந்தப்படுத்தி தொழுகை செய்ய வைப்பதில்லை. மாறாக நாம் விரும்பினால். அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும். ஆவியோடு தொழுதுகொள்ள வேண்டும் என்பது, புரிந்து கொள்ளுதலோடு தொழுகை செய்தல் என்று பொருளாகும். உண்மையோடும் என்பது புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தின்படி, தொழுகை செய்தலாகும். இவ்வழியில் மட்டுமே நமது ஆராதனை உண்மையுள்ளதும், ஏற்புடையதுமாகும்.

உண்மையோடு தேவனைத் தொழுது கொள்ள வேண்டும் என்று கூறப்படுவதால், சத்தியம் நம்மிடத்திலே எதிர்பார்ப்பது என்ன என்பதை கண்டறிய வேண்டும். இதைக் கண்டறிய புதிய ஏற்பாட்டிற்கு நாம் திரும்ப வேண்டும். தம்மை உண்மையோடு தொழுதுகொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பாரேயானால், அவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதை தமது சத்தியத்தில் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டை படிக்கிறபொழுது, ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனைத் தொழுது கொள்ளுகிற விஷயத்தில், ஐந்து வித்தியாசப்பட்ட காரியங்களில் அல்லது செயல்பாடுகளில் நிலைத்திருந்தனர் என்பதை அறிவோம்.

1. தேவனுடைய வசனத்தை படிக்கும்படியாக அவர்கள் கூடி வந்தனர். அப்போஸ்தலர் 20:7 ல் கூடி வந்த கூட்டத்தாருக்கு பவுல் பிரசங்கிக்கிறார். நாம் சத்தியத்தை தேட வேண்டும் என்று போதித்தார். (யோவான் 5:39). பவுல் சத்திய வசனத்தை படித்து போதிக்கும்படி தீமோத்தேயுவுக்கு கட்டளையிட்டார். (2 தீமோத்தேயு 2:15) வேத வகுப்பு அல்லது வேத போதனையின்றி, நிச்சயமாக ஆராதனை சரியானதாக அமையாது. இதுதான் தேவனுடைய வசனம் போதிக்கும் சரியான வழி.

2. தேவனிடத்தில் ஜெபிக்கும்படி அவர்கள் கூடிவந்தனர். ஆதி கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று வாசிக்கிறோம். (அப்.2:42). இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று பவுல் கூறியிருப்பதால், (1 தெச. 5:17) இது ஆராதனையையும் உள்ளடக்கியது என்பது நிச்சயம். கிறிஸ்துவும், மனுஷர்கள் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை போதித்தார். (லூக்கா 18:1) மனிதன் தேவனிடத்தில் பேசுகிற வழி இதுவே. எனவே ஆராதனையில் ஜெபமின்றி நிச்சயமாக அதை முழுமையாக்க இயலாது.

3. தேவனுக்கு துதிகளைப் பாடும்படி அவர்கள் கூடிவந்தனர். இதை ஆதரித்து அநேக வசனங்கள் பேசுகின்றன. ஆனாலும், நாம் பின் வருவதை முதலாவதாகக் காண்போம். "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக் கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம் பண்ணி, (எபே.5:19) மேலும் கொலே.3:16-ஐயும் சிந்தித்துப்பாருங்கள். இரண்டு வகையான இசையையும் கவனிக்க வேண்டும். குரலிசை மற்றும் வாத்திய இசை. தேவன் தமது ஆராதனையில் குரலிசையை மாத்திரமே விரும்புகிறார். எபி.13:15-ல், அளவற்ற, ஜீவனற்ற, இருதயமற்ற, வாத்தியக் கருவியினால் உண்டாகும் இசையைக் காட்டிலும், நமது உதடுகளின் கனிகளாகிய குரலிசையினால் அவரைத் துதித்தலையே தெளிவாக்குகிறது. கர்த்தர் பிரியப்பட வேண்டும் என்பது தான் முக்கியம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.


4. கர்த்தருடைய பந்தியிலே பங்கேற்கும் படி அவர்கள் கூடிவந்தனர். மத்தேயு 26:26-28 - ல் கிறிஸ்து இந்தப் பந்தியை ஸ்தாபிதம் பண்ணி, அப்பம் அவரது சரீரத்தையும், திராட்சை ரசம் அவரது இரத்தத்தையும் அடையாளப்படுத்துகிறது என்றார். 1 கொரிந்தியர் 11-ம் அதிகாரத்தில், கிறிஸ்தவன் அப்பத்திலும், திராட்சை

இரசத்திலும் பங்கு பெற்று அவரது சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூற வேண்டும் என்பதை பவுல் கூறுகிறார். எபி.10:25 - ல் இப்படி சபை கூடிவருதலை நாம் விட்டுவிடக் கூடாது என்று எச்சரிக்கிறது.

5. அவர்கள் தங்கள் வரவுக்குத் தக்கதாக கொடுக்கும்படி கூடினார்கள். கொரிந்து சபைக்கு பவுல் குறிப்பிடுகையில் "நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு அவனவன் தன் தன் வரவுக்குத்தக்கதாக வாரத்தின் முதல் நாள் தோறும் எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்." (I கொரி.16:2) என்றார். அவர்கள் தங்கள் வரவுக்குத்தக்கதாக வாரத்தின் முதல் நாள்தோறும் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டதை நாம் மனதில் கொள்ள வேண்டும். ஒரு தொகை அங்கே குறிப்பிடப்படவில்லை. அவர்கள் மன விருப்பப்படி கொடுக்க வேண்டியவர்களாயிருந்தனர். எனவே எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதை தங்கள் வரவுக்குத்தக்கதாக தீர்மானம் செய்ய வேண்டுவது அவரவர்களின் கடமை.

எனவே இதைத்தான் வசனம் வெளிப்படுத்துகிறது. இப்படி தொழுகை செய்யும் படி ஆதி கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் கூடிவந்தனர். நாம் கிறிஸ்தவர்களாயிருப்பின் இதைவிடக் குறைத்து எதையும் செயல்படுத்தலாமா?

*J.C. Choate* *J.C. சோட்*



# கிறிஸ்தவப் பெண்ணும் - தாழ்மையும்

ஒரு கிறிஸ்தவப்பெண்ணுக்கு இருக்கக் கூடிய மிகவும் வியக்கத்தக்கதும், அழகானதுமான குணம் "தாழ்மையே." தன்னைவிட, மற்றவர்களையும் தேவனையும் அதிகமாக நினைக்கும் போது ஒரு பெண்ணின் ஜீவயத்தில தாழ்மையை காண முடியும். ஒருவர் இப்படிச் சொன்னார், "தாழ்மை எனபது தன்னைப பற்றி மிகவும் குறைவாக நினைப்பதல்ல மாறாக அது தன்னைப் பற்றியே நினையாது இருப்பது" என்று. நாம் நம்மை தாழ்த்தும்போது கிறிஸ்துவை உயர்த்துகிறோம். ஒரு தாழ்மையான பெண், தன்னை சுய நீதியுடையவளாகவும் சுய - மகிமையுடையவளாகவும் சுய இஷ்டம் உடையவளாகவும் காண்பிப்பதில்லை.

ஒரு கிறிஸ்தவப் பெண், தேவனுக்கு கீழ்ப்படியும்படியாக தன் சுய இஷ்டங்களை விட்டுவிட வேண்டும். அப்போஸ்தலனாகிய பேதுரு, "மனத்தாழ்மையை அணிந்து கெள்ளுங்கள்" என்று Iபேதுரு. 5:5ல் கூறுகிறார். அவள் இருதயத்தில் தாழ்மை உள்ளவளாக இருப்பதை தன் உடையிலும், பேச்சிலும் நடத்தையிலும் காண்பிக்கவேண்டும். பேதுருவின் நாட்களில், வேலைக்காரர்கள், தங்கள் மற்ற ஆடைகளை மறைக்கவும், பாதுகாக்கவும் வெளிப்புற ஆடைகள் அணிவதுண்டு. இன்றைக்கு சமையல் கூடத்தில் தங்கள் ஆடைகள் அழுக்காகாமல் பாதுகாக்கும்படி மேலே அணிகிற உடையைப்போல அது இருக்கும், இவ்வாடை அவர்கள் சேவை செய்கிறவர்கள் என்பதை காட்டுகிறது. ஒரு கிறிஸ்துவப் பெண் தான் மற்றவர்களுக்கு சேவை செய்ய தயார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்களுக்கு சேவை செய்வது கிறிஸ்துவுக்கு சேவை செய்வதாகும்.

வயதான ஒரு மனிதர் வேதாகமப் பக்கங்களை வாசிக்கையில் இவ்வார்த்தைகளைப் படித்தார், "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா. 15:14). இவ்விடத்தில் அவர் நிறுத்தி புன்னகையுடன், "ஆம், நாம் நமது சிநேகிதர்களாகவே இருக்கிறோம். கிறிஸ்துவின் சேவையை புறக்கணிக்கிறவன் தனக்குத் தானே மிக மோசமான எதிரியாக இருக்கிறான்" என்றார்.

தேவனை ஆராதிப்பதில் நாம் தாழ்மையாக இருக்கவேண்டும். நாம் செயயவேண்டும் என்ற ஆசை கொண்டிருக்கும் காரியத்தை விடுத்து கர்த்தருடைய காரியங்களை செய்யவேண்டும். "கர்த்தருக்கு முன்பாக

தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று யாக்கோபு கூறுகிறார் (4:10) யாக்கோபு இதை எழுதும்போது, தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்புகிறவர்கள், பூமியில் படுத்து, புழுதியில உருள்வார்கள். அவர்களுடைய தவறுகள் அவர்களுக்கு மன்னிக்கப்டுமானால், அவர்கள எழுந்து புழுதியை உதறி வேறு நால்லாடைகளை உடுத்துவார்கள். அதைப்போலவே, நாம் நம்மை காத்தருக்கு ஒப்படைக்கும் போது அவா நம்மை உயாத்துவார்.

ஒரு கிறிஸ்தவப் பெண், சண்டைகளினாலும், வீண் மகிமைக்காகவும் காரியங்களை செய்யக் கூடாது. மற்றவர்களிடத்தில் அவள் தாழ்மையைக் காண்பிக்க வேண்டும். தன்னுடைய மதிப்பையும் கணத்தையும் கணக்கில் கொண்டு, தனக்கு ஏற்றகாரியங்களை மாத்தரம் செயய வேணடும். அவள் தன்னைப் பற்றி தாழ்மையான எண்ணம் கொண்டவளாக, மற்றவர்களைவிட தன்னை முன்னாக காண்பிக்காமல், தானும் குறைவுகள் உடையவளாக இருக்கிறோம் என்று உணரவேண்டும்.

ஒரு கிறிஸ்தவப் பெண், தாழ்மையும் தேவபயமும் உள்ள நண்பர்களை தெரிந்தெடுக்க வேண்டும். தான் பெரியவள் என்று நினைக்காமல், மற்றவர்களிடமிருந்து ஆலோசனையும், வழிநடத்தலும் பெற வேண்டும் என்ற நினைப்புள்ளவளாக இருக்க வேண்டும்.

தேவனுக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பிசாசிற்கு எதிர்த்து நிற்க்கும்போது ஒரு கிறிஸ்தவப் பெண் தாழ்மையில் வளர முடியும் (யாக்கோபு 4:7) அவள் தொடர்ந்து தேவனுக்கு கீழ்படிய வேண்டும். இப்படி செய்யும்போது அவள் பிசாசிற்கு எதிர்த்து நிற்க முடியும், தேவ சித்தம் செய்யும் வரை அவளை, சாத்தான் மேற்கொள்ள முடியாது.

நாம் செய்யும் சேவையின் மூலம் நாம் தாழ்மையின் ஆவியை பெற முடியும். சீஷர்களின் கால்களை கழுவிய நிகழ்வின் போது நமக்கு ஒரு நல்ல முன்னுதாரணத்தை இயேசு வைத்துச் சென்றுள்ளார். (யோவ.13:13-17)

பவுலும், கிறிஸ்துவும் நமக்கு தாழ்மையின் உதாரணங்கள். "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:5-7).

பவுல் தன்னை அப்போஸ்தலர்களில் மிகச்சிறியவன் என்றும், தன்னை அப்போஸ்தலன் என்று அழைப்பதற்கும் பாத்திரனல்ல என்றும் கூறினான். இயேசுவின் தாயாகிய மரியாள் தாழ்மை உடையவளாக இருந்தாள். மேசியாவின் தாயாகப்போகிறாள் என்று தூதன் தன்னிடம் அறிவித்த போது, அவள் ஒரு தச்சனுக்கு நிச்சயிக்கப்பட்ட, சிறியதாக எண்ணப்பட்ட நாசரேத் என்னும் ஊரில் வசித்து வந்த யூதப் பெண்ணாக

இருந்தாள். மேரியாவின் வருகை வெகு நாளைக்கு முன்பே முன்குறிக்கப்பட்டு - எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தது. இந்த அறிவிப்பு அவளுக்கு கொடுக்கப்பட்ட போது, அவளுடைய பதிலைப் பாருங்கள், "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்". (லூக்கா. 1:38) எலிசபெத்தை காணும்படியாக சென்ற போது, "மரியாள் என் ஆத்துமா, கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார், இதோ இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னை பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்கு செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது (லூக்கா. 1:46-49) என்றார். அவருடைய தாழ்மை அவருடைய பேச்சிலும் இருதயத்திலும் வெளிப்படுகிறது. அவள், தன் குமாரனுடைய பிறப்பின் விஷயங்களை எல்லாம் தன் இருதயத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

ஸ்விடன் நாட்டு ராணி ஒருத்தி, தன் முத்துக்களை விற்று தன் மக்களுடைய மருத்துவமனைக்கும், அனாதை இல்லங்களுக்கும், மனநல மருத்துவமனைகளுக்கும் கொடுத்தாள். அவளே ஸ்தாபித்த ஒரு மருத்துவமனைக்கு ஒரு முறை அவள் சென்று பார்க்கையில், படுத்த படுக்கையாக இருந்த மூதாட்டி ஒருத்தி இவள் தனக்கு செய்த தயவுக்காகவும், கவனிப்புக்காகவும் கண்ணீர் மல்க நன்றி சொன்னாள், அவள் அருகாமையில் அமர்ந்திருந்த அந்த ராணியின் கைகளில் அவள் சிந்திய கண்ணீர் துளிகள் விழுந்தது? நன்றியுள்ள இருதயத்தின் அடையாளத்தை தன் கைகளில் கண்ட அந்த ராணி, "தேவன் என் முத்துகளை மீண்டும் என்னிடமே அனுப்பினார்" என்று அருமையாகக் கூறினாள்.

ஆத்துமாவின் தெய்வீக செயல்பாடுகளின் விளைவே தாழ்மை. மற்ற எல்லா குணங்களையும் தன்னுடையதாக ஒரு பெண் கொண்டிருந்தாலும், தாழ்மையில்லை என்றால், காற்றடிக்கும் நாளில் வாசமிகு வண்ணப் பவுடர்களை மூடி இல்லாத பெட்டியில் எடுத்துச் செல்வதற்கு சமம். "தாழ்மை, இருளைப்போலவே பரலோக வெளிச்சத்தை வெளிப்படுத்தும்" என்று தோரியூ என்பவர் சொன்னதை நினைவில் கொண்டு, ஒரு கிறிஸ்துவப்பெண் தாழ்மையின் குணத்தை பெற்றுக்கொள்ள முற்பட வேண்டும். தேவன் தாமே இக்காரியங்களில் உங்களுக்கு உதவி செய்வாராக! ஆமென்.

***- Mamie. W. Hayhurst***

# அது இரவலாக வாங்கப்பட்டதே...

அன்பே உருவாய்க் கொண்டு, ஆருயிரையும் அருமையாக எண்ணாமல், இன்னல்களில் சிக்கி துன்புருவோரை மீட்க்கும் நோக்குடன், ஈனப்பிறவிகள் என மனிதர்களால் எட்டித்தள்ளப் பட்டவர்களையும் ஏகமாய் ஏற்றுக் கொண்டு, உள்ளத்தில் ஊக்க மளித்து, எல்லாம் படைத்த விண்ணவர் நமது ஏக்கம் துடைத்து, ஐயம் நீக்கி, ஒப்பற்ற சுவிசேஷ ஒளி தந்த அவரை ஓயாமல் போற்றி ஔஷதம் போன்ற அவர் திருவார்த்தையை தியானிக்கும் உள்ளம் படைத்த வாலிபர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் ஃகென உறுதி கொண்ட நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அன்பான பொருள் நாம் தொலைத்து விட்டால் மிகுந்த அக்கரையும் கவனமும் கொண்டு அதை மீட்டுக் கொள்ள வேண்டும் என்ற தனியா நினைப்புக் கொண்ட பருவந்தான் இவ்வாலிபப் பருவம் என்பதில் எவ்வளவும் ஐயமில்லை.

சிருஷ்டிப்பின் முடியாகத் திகழும் மனித குலத்தை தேவன் ஆதியிலே செம்மையானவனாக உண்டாக்கினார். சந்தேகம் என்னும் சேற்றில் தன் தேகத்தையும், சிந்தையும் மூழ்கினதால் பாவம் என்னும் படுகுழியில் வீழ்ந்தான் மனிதன், தேவஉறவை இழந்த மனிதனை இழந்த நிலையிலேயே விட்டுவிடவில்லை, அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதைக் கவனியுங்கள், *"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்"*. என்கிறார். (ரோம 5:8) நாம் மீண்டும் தேவனோடு உறவாட வேண்டும் என்பதற்காக தன் ஏகசுதன் என்றும் பாராமல் ஏகச்சக்ராதிபதியாகிய யெகோவா தேவன் இயேசுவை கோர சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார் என்பதை வாலிபர்களாகிய நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பழைய ஏற்பாட்டுச் சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## தொலைந்து போன கோடாரி

இஸ்ரவேலில் ஆகாமிய ஆட்சி செய்த ஆசைக்கார அரசன் ஆகாப் ஆண்டு கொண்டிருந்த நேரமது. தீர்க்கதரிசன நூல்களை

வேதாகமத்தில் எழுதவில்லை என்ற போதிலும் வேதத்தில் மிகப்பிரபலமான தீர்க்கதரிசிகளான எலியாவும், எலிசாவும் வாழ்ந்த காலம். எலியா வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் எலிசா இரட்டிப்பான ஆவியைப் பெற்று கர்த்தருடைய பணியைத் தொடர்ந்து செய்தான். அக்காலகட்டத்தில் தீர்க்கதரிசிகளின் புத்திரர் அதிகமான எண்ணக்கையில் உயர்ந்ததினால் அவர்கள் இருந்த இடம் நெருக்கமாய் மாறிப்போயிற்று.

தீர்க்கதரிசியின் புத்திரர் எலிசாவினிடத்திற்கு வந்து, நாங்கள் யோர்தான் மட்டும் சென்று, மரம் வெட்டி, வீடு கட்டி, ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்று சொல்லி அவனையும் அழைத்துக் கொண்டு யோர்தான் நதிக்கு வந்து மரங்களை வெட்டி வீழ்த்துகையில், ஒருவனின் கோடரி தண்ணீருக்குள் விழுந்தமிழ்ந்து போயிற்று, இவ்வேளையில் தான், அவன் தன் ஆண்டவனாகிய எலிசாவை நோக்கி "ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான்." (II இரா 6:5) எலிசா அது விழுந்த இடத்தை கேட்டறிந்து, அங்கே வெட்டின கொம்பொன்றை தண்ணீரில் எறிந்து, அந்த இரும்புக் கோடரியை மிதக்கப்பண்ணி, தொலைத்தவனை நோக்கி எடுத்துக்கொள் என்றான், தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சி அடைந்தான் அந்த தீர்க்கதரிசியின் புத்திரன் (IIஇரா.6:1-7)

வாலிபர்களே! பழைய ஏற்பாட்டில் நடந்த இச்சம்பவத்திற்கும், நமது ஆத்தும நிலைக்கும் ஒரு ஒப்புமை இருக்கவே செய்கிறது. கோடரியை தொலைத்த மனிதன் கூவிக் கூறின வார்த்தைகள், சாலோமோன் ஞானி சொல்வது போல், "மனுஷனுடைய வாய்மொழிகள் ஆழமான ஜலம் போலிக்கும்......" (நீதி 18:4) மிகுந்த ஆழமான அர்த்தம் கொண்டவை. இந்த தீர்க்கதரிசியின் புத்திரனிடம் தனக்கென ஒரு கோடரி இல்லை. அவன் தனக்கு என்று இரவலாக கோடரி ஒன்றை வாங்கி தன் வேலையை செய்கையில் அதை தொலைத்து விட்டான், நியாயப்பிரமாணம் என்ன கூறுகிறது என்பதை நாம் வாசிக்கையில், "ஒருவன் பிறனிடத்தில் எதையாகிலும் இரவலாக வாங்கினதுண்டானால், அதற்கு உடையவன் கூட இராதபோது, அது சேதப்பட்டாலும், செத்துப்போனாலும் அவன் அதற்கு உத்திரவாதம் பண்ணவேண்டும். (யாத். 22:14) என்கிறது.

தீர்க்கதரிசியின் புத்திரன் தன்னால் தனக்கு என்று ஒரு கோடரியை கொள்ள முடியாமல் தான் இரவலாக வாங்கியிருந்தான்.

ஆனால் இப்பொழுது, தான் இழந்ததை மீட்டுக் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டான், அவனால் இக்காரியத்தை செய்ய முடியவில்லை என்கிற நிலையை உண்மையாக உணர்ந்ததால் தான், அவன் வாயிலிருந்து, "ஐயோ என் ஆண்டவனே, இது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான்". "கூவினான்" என்கிற வார்த்தை அவனின் உள்ளத்தின் ஏக்கத்தை வெளிக்காட்டும் சொல்லாக இருக்கிறது. வாலிபர்களே, "நீங்கள் உங்களுடையவர்களல்லவென்று அறியீர்களா?....... கிரயத்துக்கும் கொள்ளப்பட்டீர்களே" (I.கொரி 6:19, 20) என்று பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார்.

எனக்கன்பான வாலிப நெஞ்சங்களே! நாம் நம்முடைய ஆத்துமாவை தேவனிடமிருந்து இரவலாக பெற்றிருக்கிறோம். (ஆதி 2:7) அதை நாம் காத்துக்கொண்டு, தேவன் நமக்கு தந்திருக்கும் திட்டத்திபடியே இரட்சித்து அவரிடமே ஒப்படைக்க வேண்டும் (I கொரி 15:35-55) மனிதன் இவ்வுலகத்தையே ஆதாயப்படுத்தினாலும் அது தன் ஆத்துமாவிற்கு ஈடாகாது என்பதை உணர வேண்டும் (மத் !6:26) நமது பாவங்களும், அக்கிரமங்களும் தேவனிடத்திலிருந்து நம்மை தொலை தூரத்திற்கு எடுத்துச் செல்கிறது. நாம் தொலைந்து போனோம். "ஐயோ, என் ஆண்டவனே இரவலாக வாங்கப்பட்டது" என்று அந்த தீர்க்கதரிசியின் புத்திரன், தன் ஆண்டவனை நோக்கி கூவியது! போல மனித குலம் தன்னை இரட்சிக்கத் திராணி இல்லாதவர்களாக இருந்து தேவன் தங்களை இரட்சிக்கும்படி ஏக்கத்துடன் எதிர்பார்த்தது.

எலிசா ஒரு கொம்பை வெட்டி தண்ணீருக்குள் போட்டு கோடாரியை மிதக்க செய்தான் என்று நாம் கண்டோம். ஒரு மரக் கொம்பை வெட்டி அதை தண்ணீருக்குள் போட்டது அற்புதமாகாது, அந்த கொம்பு இரும்பு கோடரியை மிதக்கச் செய்ததே, அதுவே, இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதமாக இருக்கிறது. அது போலவே இயேசுவும் பாவவுலகில் வந்து ரோம சிலுவையில் மரித்து அப்படியே இருந்திருப்பாரானால், நாம் அதில் அற்புதம் ஏதும் காண முடியாது. மாறாக கோடரி தண்ணீரின் மேல் வந்தது போல் அவர், மரணத்தை ஜெயித்தவராக, வெற்றி வீரனாக, காலமெல்லாம் மரண பயத்தில் வாடியவருக்கெல்லாம் உதவும் படியாக மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தது தான் உலக வரலாற்றில் மிகச் சிறந்த அற்புதம்.

இயேசு, இந்த பூமிக்கு கீழாக மூழ்கி, பின்பு வெற்றி வேந்தனாக உயிர்த்தெழுந்து தொடர்ந்து, மீட்பராக பரிந்து பேசுகிறவராக

மத்தியஸ்தராக, இரட்சகராக இருக்கிறார். (எபி 9:12; I யோ 2:1 II தீமோ 2.:15 I யே 4:14) பழைய ஏற்பாட்டுச் சம்பவத்தில் எலிசா ஒரு கொம்பை வெட்டி தண்ணீருக்குள் போட்டான். நமது தேவனும் "தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:75) அந்த தாவீதின் கிளை முளைத்து நமது இரட்சிப்புக்காக தான் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்தது, கோடரி தண்ணீரின் மேலே மிதந்தது போல், நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்கும் தேவ திட்டம் எல்லாருக்கும் வெளியரங்கமாயிற்று.

கோடரி தண்ணீரின் மேல் மிதந்தது எலியா தீர்க்கதரிசியின் புத்திரன் நோக்கி, "அதை எடுத்துக்கொள் என்றான். அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்". (II இரா 6:7) மனித குலத்தைப் பார்த்து, ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்... விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கடவன்". (வெளி 22:17) என்று சொல்கிறார்கள். நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம், அதை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக விசுவாசத்தின் மூலம் நமது கையை நீட்டி நித்திய ஜீவனைப் பிடித்துக்கொள்ள வேண்டும் (எபே 2:8 I தீமோ 6:12)

ஆவிக்குரிய ரீதியில் நாம் எதையெல்லாம் இழந்தோமோ அதை நமது எஜமானாகிய கிறிஸ்து மட்டுமே மீட்டுத்தர முடியும், அவரே நமக்கு வழியும், சத்தியமும் ஜீவனுமுமாய் இருக்கிறார் (யோ 14:6) கிளை முளைத்தது. கொம்பு அனுப்பப்பட்டது. பாவத்தில் மூழ்கி போனவர்களை எழுப்பும் படியாக வழிவகை செய்தது. ஆத்தும இரட்சிப்பு எல்லாருக்கும் பிரசன்னமானது (தீத்து 2:11) இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்பபோமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம். (எபி 2:4) ஆகவே எனக்கருமையான வாலிப உள்ளங்களே! நமக்கு முன் வைக்கப் பட்டிருக்கும் இரட்சிப்பை நாம் கரம் நீட்டி எடுத்துக்கொள்வோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம்! ஆமென்.

ஜே. பிக்கின்ஸ்

# தேவனால் என்ன செய்ய முடியும் என்பதைப் பாருங்கள்

என் அன்பிற்குரிய சிறுதம்பிகளே, தங்கைகளே, உங்கள் யாவருக்கும் நம்மை மிகுதியாக நேசிக்கின்ற இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கோடையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட உங்களுக்கு இம்மாதம் யோசேப்பின் மூலம் சில பாடங்களை உணர்த்த முயற்சிக்கிறேன். நீங்கள் இப்பகுதியை ஒவ்வொரு மாதமும் படித்து பயன் பெறுவீர்கள் என நம்புகிறேன். சரி, யோசேப்பு அப்படி என்ன தான் செய்தான்? படியுங்கள்.

தனது சகோதரர்களிடத்தில் யோசேப்பு கோபம் கொள்ள அநேக காரணங்கள் இருந்தன. அவர்கள் அவனை வெறுத்தார்கள். அதை அவர்கள் வெளிப்படுத்தவும் பயப்படாதிருந்தார்கள். யோசேப்பின் தகப்பன் அவனுடைய மற்ற மகன்களின் நலனை விட யோசேப்பின் நலத்தையே அதிகமாய் நாடினான். அது அவர்களுக்கு கோபமூட்டியது. பிறகு யோசேப்பு வளர்ந்து பதினேழுவயதை அடைந்த போது தேவன் அவனுக்கு என்னத்தை காண்பித்தார் தெரியுமா? பலவித விசேஷமான கனவுகளை அனுப்பினார். அதில் ஒரு கனவிலே அவனுடைய சகோதரரின் தானியக் கட்டுகள் அவனுடைய தானியக் கட்டின் முன் பனிந்து நின்றன. யோசேப்பு தன் சகோதரர்களிடத்தில் அக்கனவுகளை சொன்ன போது அவனை இன்னும் அதிகமாக வெறுத்தார்கள். அவர்களுக்கு சரியான சமயம் கிடைத்த போது யோசேப்பை, எகிப்திற்கு கூட்டமாக சென்று கொண்டிருந்த வியாபாரிகளிடத்தில் விற்றார்கள். எகிப்திலே, யோசேப்பு அடிமைத்தனத்திற்குள்ளாக விற்கப்பட்டான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு பெண் அவன்பேரில் பொய்சொல்லி அவனை சிறைச்சாலைக்கு அனுப்பினாள். யோசேப்பின் நிலைமையைப் பாருங்கள், அவனுடைய சகோதரர்களால் அவனுடைய வாழ்க்கையே சீர்குலைந்து போயிற்று.

சிலகாலம் சென்றபின்பு அவனுடைய சகோதரர்கள், தாங்கள் செய்த குற்றங்களுக்கெல்லாம் மிகவும் சஞ்சலப்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் எகிப்திற்கு போக வேண்டிய நிலை ஏற்பட்டபோது, யோசேப்பு அவர்களை எப்படி நடத்துவானோ என்று கவலைப் பட்டார்கள். அவர்களுக்குள்ளே அவர்கள் என்ன பேசினார்கள் தெரியுமா? "ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து நாம்

அவனுக்கு செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்கு சரிக்கு சரிகட்டுவான்." என்று சொன்னார்கள் (ஆதி. 50:15).

ஒருவேளை நீங்கள் யோசேப்பாக இருந்தால் நீங்கள் உங்கள் சகோதரரை எப்படி நடத்துவீர்கள்? என்ன நினைப்பீர்கள்? நீங்கள் அவர்களை அடிமைகளாக்கியிருப்பீர்களோ? அவர்களை சிறையிலே அடைத்திருப்பீர்களோ? நாம் எப்படியோ! ஆனால் யோசேப்பு அப்படி நடந்து கொள்ளவில்லை. மாறாக, அவன் தன் சகோதரரையும் அவர்களுடைய குடும்பத்தையும் பாதுகாத்து கவனித்துக் கொண்டான். அந்த சமயத்திலே யோசேப்பு மிகுந்த செல்வந்த னாகவும் பலமுள்ளவனாகவும் காணப்பட்டான். ஆனால் அச்செல்வங்களை எல்லாம் அவனுடைய குடும்பத்திற்கு உதவவே உபயோகித்தான். ஏன் அவன் சகோதரர்களை அவ்வளவு அருமையாக உபசரித்தான்? யோசேப்பு அவர்களை நோக்கி, "பயப்படாதிருங்கள் நான் தேவனா, நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனோ. இப்பொழுது நடந்துவருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடு காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதி 50:19.20) என்று விவரித்தான். இன்னும் சொல்லப்போனால் யோசேப்பின் கண்கள் தன் மேலேயே நோக்கமாயிராமல் தேவன் மீது நோக்கமாயிருந்தது. அவனுடைய சகோதரர்களை வெறுப்பதற்கு பதிலாக, தேவன் எப்பொழுதும் தன்னோடே இருந்து அவனுடைய கஷ்டமான வேளைகளில் தனக்கு உதவுகிறார் என்பதை உணர்ந்தான். யோசேப்பின் சகோதரர்கள் செய்தது தீங்காயிருந்தாலும், தேவன் அவற்றிலிருந்து நன்மையானதை கொண்டுவரச் செய்தார். கடைசியில் யோசேப்பு, தேவன் அவனுக்கு நல்லவராக இருந்தார் என்றும் தன் சகோதரர்களுக்கு நல்லவனாக இருக்கவேண்டும் என்று உணர்ந்தான்.

இது, நாமும் கடைப்பிடிக்கும்படியான சிறந்த உதாரணம் தானே! அடுத்த முறை யாராவது உங்களுக்கு தீங்கு செய்ய நினைத்தால், யோசேப்பைப் போல நீங்களும் நடக்க முயற்சி செய்து பாருங்கள். நீங்களும் தீமையை எண்ணாமல் பொறுமையாக இருந்தால் தேவன் அதை நன்மையாக முடியப்பண்ணுவார். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! தேவனும் உங்கள் மீது பிரியமாயிருப்பார். எனக்கன்பான தம்பி, தங்கைகளே நீங்கள் அப்படியே செய்ய தேவன் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக! ஆமென்.

*- R. Abel R. Nayagam.*



# வெளிப்படுத்தின விசேஷம்

அதிகாரம் 20:11 - 21:7

வெளிப்படுத்துதல் 20-ம் அதிகாரத்தின் 11-ம் வசனம், வெளிப்படுத்தல் நூலின் கடைசிப் பகுதியின் தொடக்கமாக உள்ளது. இந்நூலின் மீதிப்பகுதி, நியாயத்தீர்ப்பின் நாள், பரலோகம், நரகம் ஆகியவைகளை விவரிக்கிறது? வெளி 20:11 -15 வசனங்கள் உலகத்தின் முடிவு நியாயத்தீர்ப்பின் நாள் நித்தியம் ஆகியன பற்றிச் சொல்கிறது. வசனம் 11-ல் யோவான், வெள்ளைச் சிங்காசனத்தையும், அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டான். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும், வானமும் அகன்று போயின, அவைகளுக்கு இடங்காணப்படவில்லை என்றுள்ளது? யெகோவா சாட்சிக் காரர்களும், வேறு சில பிரிவினைச் சபையாரும், இப்பூமிதான் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு நித்திய வீடாக இருக்குமென்று நம்பவும் போதிக்கவும் செய்கின்றனர். ஆனால், இவ்வுலகம் கிறிஸ்து வரும் போது அகன்று போம் என்றும், வானம், பூமி இவைகளுக்கு இடம் காணப்படாது என்றும் இவ்வசனம் தெளிவுபடுத்துகிறது. "அகன்றுபோம்" இவைகளுக்கு "இடம் காணப்படாது", என்னும் பதங்கள், இவைகள் இனி முழுமையாகவும், நிரந்தரமாகவும் இராது என்ற பொருளையே தருகிறது? இந்தப் பூமியானது தற்காலிகமானது (மத் 24:35, IIகொரி 4:18) கிறிஸ்து வரும் போது இது முற்றிலும் அக்கினிக்கு இரையாக்கப்படும் (11 பேதுரு 3:10-14).

உலகத்தின் முடிவுக்கு பிறகு, இயேசு தம்முடைய சிங்காசனத்தில் அமர்ந்து, எல்லோரையும் நியாயந்தீர்ப்பார் (மத். 25:31-46) இச்சம்பவத்தின் வெள்ளோட்டம் யோவானுக்குக் காட்டப் பட்டுள்ளது. வசனம் 12-ல் "மரித்தோராகிய சிறியோரும், பெரியோரும் தேவனுக்கு முன்பாக நிற்க யோவான் கண்டான்". இப்பூமியில் ஒருவன் எவ்வளவு செல்வந்தனாகவும், வல்லமையுடையவனாக இருந்தாலும் அது ஒரு பிரச்சினையே அல்ல, நியாயத்தீர்ப்பின் நாளில் விதிவிலக்கோ, தப்பித்துக் கொள்ளுதலோ இருக்காது (வெளி 6:14-17) இப்பூமி உண்டானது முதல் வாழ்ந்து எல்லோரும்,

இயேசுவின் சிங்காசனத்திற்கு முன்பாக அந்நாளில் கூட்டிக் சேர்க்கப்படுவார்கள். (யோவான் 5:25-29அப்-17 30-31 ரோமர் 2:5-11 14: 10-12 11கொரி 5:10) இயேசுவுக்கு முன்பாக நிற்பதும், தேவனுக்கு முன்பாக நிற்பதும் ஒன்றுதான் என்றும் வசனம் 12-ல் பார்க்கிறோம். இது கிறிஸ்துவின் தெய்வீகத்தை உறுதிபடுத்தும் இன்னொரு வசனமாகும்.

எல்லா மனிதரும் கிறிஸ்துவுக்கு முன்பாகக் கூட்டிச் சேர்க்கப்பட்டதற்குப் பிறகு புத்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகமும் வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந் தார்கள்" (வெளி 20:12) புத்தகங்கள் என்று பண்மையில் சொல்லப்பட்டிருப்பதும் அந்தப் புத்தகங்களின் படியே நியாயத் தீர்ப்படைவோம் என்பதும், புதிய ஏற்பாட்டின் இருபத்தேழு புத்தகங்களை உள்ளடக்கியதாகவே உள்ளது. (யோவா 12:48, யாக் 2:12) கிறிஸ்துவின் பிரமாணத்தோடு, ஜீவ புத்தகமும் திறக்கப்படும். அந்தப் புத்தகத்தில் பெயரெழுதப்பட்டவனாகக் காணப்படுகிறவன் பரலோகத்தில் பிரவேசிப்பான் (வெளி.21:27) பெயரெழுதப் பட்டவர்களாகக் காணப்படாதவர்கள் நித்தியத்தை அக்கினிக்கடலில் கழிப்பார்கள் (வெளி.20:15) இரட்சிக்கப்படுவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. (அப்16:17) அப்படியென்றால், ஜீவ புத்தகத்தில் பெயரெழுதப்படுவதற்கும் ஒரே ஒரு வழி தான் இருக்கும். எபி 12:23 கிறிஸ்துவின் சபையிலிருப்போரின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கும் என்று சொல்லுகிறது.

ஞானஸ்நானத்தின் மூலமாக தேவன் ஒருவனை சபையில் சேர்க்கிறார் (அப் 2:36,47) (1 கொரி 12:13) அதன் பொருள். ஞானஸ் நானத்தின் மூலம் ஒருவனுடைய பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்படுகிறது. ஜீவ புத்தகத்தில் பெயரெழுதப்படுவதற்கு வேறு குறுக்கு வழிகள் கிடையாது. ஜீவ புத்தகம் "ஞாபகப் புத்தகம்" என்றும் அழைக்கப்படுகிறது. (மல் 3:16) ஒருமுறை இரட்சிப்படைந்தவர் எப்பொழுதும் இரட்சிக்கப்படுகிறார். அதாவது அவன் வீழ்ந்து போவதில்லை என்றும் பிரபலமான பிரிவினை சபைக் கொள்கை "தவறானது" இக்கொள்கை ஜான் கால்வின் (John Calvin) என்பவரால்

ஏற்படுத்தப்பட்டது. எல்லாம் என்று சொல்லாவிட்டாலும் பெரும்பான்மையான பிரிவினைச் சபையரால் பின்பற்றப்படுகிறது. இக்கொள்கை தவறு என்று பல வசனப்பகுதிகள் நிரூபிக்கிறது. (11 பேருது 2:20,22) (எபி 3:12,13) தேவன் ஜீவ புத்தகத்தில் பெயரை எழுதுவது போல, தேவனாலே கிறுக்கி போடவும் முடியும் (யாத் 32:32, 33) (சங் 69:27,28) ஜீவ புத்தகத்தில் நம்முடைய பெயர் இடம் பெறும்படியாகச் செய்து, அதிலிருந்து கிறுக்கிப் போடாதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும். நம்முடைய நித்தியம் அதைப் பொறுத்தே உள்ளது.

ஒருவனுடைய பெயர் ஜீவ புத்தகத்தில் இருக்கிறதோ, இல்லையோ மரித்துப்போன எல்லோரும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருப்பதின் படியாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். (வெளி.20:12) வசனமும், நியாயத்தீர்ப்பு எதனடிப்படையில் இருக்குமென்று சொல்லுகிறது. நம்முடைய கிரியைகளின்படியாக நாமெல்லாரும் நியாயந் தீர்க்கப் படுவோம் வசனம் 13-ம் அதையே சொல்லுகிறது. "சமுத்திரம்" தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும், பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள்". மனிதன் எங்கே மரித்திருந்தாலும், எப்பொழுது மரித்திருந்தாலும் அவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு நியாயத் தீர்ப்படைந்தாக வேண்டும் (யோ 5:28,29, அப் 24:15, எபி 9:27) ஒரு மனிதன் சமுத்திரத்தில் மரித்திருந்தாலும் அல்லது வேறெங்கு மரித்திருந்தாலும், அவன் உயிர்ப்பிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்படுவான் "மரணம்" பூமிக்குரிய சரீரத்தை கல்லறையிலோ சமுத்திரத்திலோ வைத்திருக்கிறது. "பாதாளம்" மரித்தவர்களின் ஆவியைக் கொண்டுள்ளது. (லூக்கா 16:19-31) மரித்துப்போன எல்லா மனிதர்களின் ஆவியும் அவர்களுடைய சரீரத்திற்கு திரும்பி உயிர்ப் பிக்கப்படுவார்கள், ஆகவேதான், அவர் "மரணமும், பாதாளமும்" தங்களிடமுள்ள மரித்தோரை ஒப்புக் கொடுக்கும் என்று சொல்லுகிறார்.

உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, மரித்தோர் யாவரும் அவரவர் கிரியைக்குத்தக்கதாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். மற்றவர்கள் செய்வதற்காக யாரும் நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள் (எசே 18:20) தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப்

பலனளிப்பார் (ரோ 2:6) "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (11 கொரி 5:10) (வெளி 22:12) நியாயந்தீர்ப்பிற்குப் பிறகு வெளி 20:14-ன்படி "மரணமும் பாதாளமும்" அக்கினிக்கடலில் தள்ளப்பட்டது. "இந்த உலகத்தின் முடிவுக்குப் பிறகு, சரீர மரணம் இருக்கப் போவதில்லை. ஏனெனில், அதன் பிறகு சரீரப்பிரகாரமாக எதுவும் இருக்கப் போவதில்லை (II. கொரி 4:15) பாதாளம் என்பதே ஒரு தற்காலிகமான இடம் தான். உலகத்தின் முடிவில் நடக்கும் உயிர்த்தெழுதலுக்காக ஆவிகள் காத்திருக்கும் இடம் (வெளி 20:14) வசனமானது துன்மார்க்கர் அனைவருக்கும் அக்கினிக் கடலானது நிரந்திர இருப்பிடமென்று வலியுறுத்துகிறது. அது ஒரு தற்காலிகமான இடமல்ல. அக்கினிக் கடல் பற்றி இவ்வசனம் "இது இரண்டாம் மரணம்" எனறு சொல்லி முடிக்கிறது. மரணம் என்பதின் பொருள் பிரிவு, சரீர மரணமென்பது, இச்சரீரத்திலிருந்து ஆவி பிரிவதாகும் (யாக் 2:26) ஆவிக்குரிய மரணமென்பது, தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே பிரிவை ஏற்படுத்துவதாகும். (ஏசா 55:2) "இரண்டாம் மரணமென்பது" நரகமாகும். அங்கே துன்மார்க்கர் தேவனிடமிருந்து, நித்திய சாபத்திற்குப் பிரிக்கப்படுவார்கள் அங்கே அவர்கள் அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்து நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை "முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின, சமுத்திரமும் இல்லாமற்போயிற்று" என்று கூறுகிறது. இங்கே மேலும் ஒருமுறை இந்த பூமி ஒழிந்து போகும் என்பதை தெளிவாகப் பார்க்கிறோம். ஆகையால் "புதிய வானமும்" "புதிய பூமியும்" சரீரப்பிரகாரமான பொருளையுடையதாயிருக்காது. அப்பதங்கள் நாம் வாசம் செய்யும் இடங்களை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது வானமும், பூமியும் நாம் தற்போது வாசம் செய்யும் இடங்கள். இது ஒழிந்து போகும். பிறகு தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகளுக்கு, நீதிமான்கள் வாசம் செய்யும் நித்தியமான புதிய வாசஸ்தலம் கொடுக்கப்படும் (II. பேதுரு 3:10-11) இந்த இடத்தை யோவான் 21-ம் அதிகாரத்தில் காட்டியுள்ளார்.

வசனம் 2-ல் "எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன். அது தான் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல் ஆயத்தப்பட்டிருந்தது" என்று யோவான் கண்டார், புதிய

வானமும் புதிய பூமியும் உன்னதங்களிலுள்ள எருசலேம் பட்டணம். இது இந்த உலகத்திற்கானதல்ல. "புதிய எருசலேம்" என்றும் தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்டுள்ள மணவாட்டி" என்று விவரிக்கப்பட்டிருக்கிறபடியால் இது கர்த்தருடைய சபைக்கான முடிவான நித்திய ஸ்தலமாயிருக்கிறது. கிறிஸ்துவின் சபைதான் பரம எருசலேம் (எபி.12:22-23) மற்றும் கிறிஸ்துவின் மணவாட்டி (ரோம 7:1-4) (IIகொரி 11:2, எபே.5:22-23, வெளி 19:7-9) கிறிஸ்துவின் சபையாரின் குடியுரிமை பரலோகத்திலிருக்கிறது (பிலி 3:20) தம்முடைய சபையை இரட்சிப்பதற்காக இயேசு மீண்டும் வருவார் (எபே 5:23) நியாயத் தீர்ப்பிற்கு பிறகு கிறிஸ்துவானவர் சபையாகிய ராஜ்யத்தை பிதாவுக்கு ஒப்புக்கொடுப்பார் (I. கொரி 15:24, I தீமோ 6 14-16) வெளி 21:2 வசனமானது கர்த்தருடைய சபைக்கும் பரலோக நகரத்திற்கு மிடையிலான தெளிவான தொடர்பை கொடுக்கிறது. பரலோகம் நம்முடைய நித்திய வீடாகும்.

வெளி 21:3 ல் பரலோகத்திலிருந்து ஒரு பெருஞ்சத்தத்தையும் அது இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ் தலமிருக்கிறது. அவர்களிடத்தில் அவர் வாசமாயிருப்பார், அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார் என்று யோவான் கேட்டான், இது கிட்டத்தட்ட அறிந்து கொள்ள முடியாததொரு ஆசீர்வாதம், பரிசுத்தமும், நீதியும், நிறைந்த நம்முடைய சிருஷ்டிகர் தம்முடைய கூடாரமாகிய பரலோகத்தை மனிதர்களுக்கு திறந்துவிட விருப்பமுடையவராயிருக்கிறார்.

நாம் அவருடன் வந்து சேர்ந்து, நித்தியகாலமாக அவருடன் வாசம் செய்வதற்கு விருப்பமுடையவராகவே இருக்கிறார். அவருடன் நாம் வாசம் செய்வது மாத்திரமல்ல, நம்முடைய தேவனாகவும், தகப்பனாகவும் நித்திய காலத்திற்கும் இருப்பார். அந்த மகிமையான, மகத்துவம் நிறைந்த வாக்குத்தத்தத்திற்கு பூமியிலுள்ள எதுவும் ஒப்பிடத்தக்கவைகள் அல்ல (ரோம8:18) இந்த அருமையான வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே நிபந்தனை, தேவனை மாத்திரம் சேவிப்பதற்கு இவ்வுலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு, பரிசுத்தமாயிருப்பதாகும். (II.கொ6:16-18, எபி 12:14) நம்முடைய இருதயம் சுத்தமாயிராவிட்டால் நாம் தேவனோடு வாசம் செய்ய முடியாது (மத் 5:8) வசனம் 21:4 ல் பரலோகத்தில் தேவனோடு

வாசம் செய்வது எப்படிப்பட்டதாயிருக்குமென்று விவரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நாம் பரலோகத்தில் பிரவேசிக்கும்போது, நம்முடைய கண்ணீர் யாவையும் அவர் துடைத்துப் போடுவார் (வெளி 7:17யும் பார்க்கவும்) "இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது". மேலும் வெளி 7:16 அங்கே பசியும், தாகமும் இருக்காது என்று கூறுகிறது. இந்த வார்த்தைகள் உண்மையில், கடுமையான, ஈவு இரக்கமற்ற முறையில் உபத்திரவங்களைச் சந்தித்த கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டதென்பது நினைவிருக்கட்டும் அநேகக் கொடுமையான முறையில் மரணத்துக்குள்ளாக்கப்பட்டார்கள் (எபி 11:35-38) மரணம், துக்கம், கண்ணீர், பசி, வேதனை போன்றவைகள் இவர்களோடு ஒட்டி உறவாடியது. ஆனாலும். அவர்கள் எந்த அளவிற்கு பாடு பட்டார்களோ. அதே அளவு பாடுகளை நாம் படாவிட்டாலும், எல்லா கிறிஸ்துவர்களும் பாடுகள் அனுபவிக்க வேண்டும் (II.தீமோ 3:12) என்பதை நாம் நன்றாகவே அறிந்திருக்கிறோம். பரலோகத்தில் பிரவேசிக்கும் எல்லோரும், வெளி 7:14ல் காணப்படும் விவரிப்புக்கு உண்மையில பாத்திராயிருக்கிறார்கள். "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்". நாம் உபத்திரவங்களைச் சகிக்க, இவ்வாழ்க்கையில் மனமற்றவர்களாயிருந்தால், பரலோகத்தில் நாம் கர்த்தருடன் ஆளுகை செய்ய முடியாது. (மத் 13:20 - 21; II தீமோ 2:12) இந்த "பூமிக்குரிய பாடுகள்" எதுவுமில்லாத ஒரு இடத்தில் இருக்க முடியும் என்பது, எப்படிப்பட்ட மகத்தானதொரு நம்பிக்கை! வெளி 21:5-ல் கர்த்தர் தம்முடைய சிங்காசனத்திலிருந்து பேசி, "இதோ, நான் சகலத்தையும புதிதாக்குகிறேன் என்றும், பின்னும் அவர் இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுள்ளவைகள், இவைகளை எழுது" என்றார். பரலோகம் இந்த பூமியைப் போலிருக்காது இந்த உண்மையின் உறுதியை அவருடைய நிபந்தனைகளை கைக்கொள்ளுகிறவர்களுக்கு, தேவன் கோடிட்டுக் காட்டுகிறார் வசனம் 6-ல் கர்த்தர், யோவானிடத்தில், "ஆயிற்று, நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றை இலவசமாய்க் கொடுப்பேன்" என்றார். பரலோகம் என்பது நித்திய வாழ்வுக்கானதொரு இடம். ஜீவத் தண்ணீரை நாம் பரலோகத்தில் இலவசமாய்ப் பருகலாம் (வெளி 7:17 பார்க்கவும்) நித்திய ஜீவகாலமாய்

ஊறுகிற ஜீவத் தண்ணீரை தருகிறேன் என்று இயேசு வாக்களித்துள்ளார் (யோ 4:10-14) பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிற ஒரு ஜீவ நதியும் ஜீவ விருட்சம் அதன் இருகரையிலும் உண்டு. (வெளி 22:1-2) தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் ஜீவ வீருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாயிருப்பார்கள் (வெளி 22:14) விருப்பமுள்ளவர்கள் ஜீவத் தண்ணீரை இலவசமாய் பெற்றுக் கொள்ளக் கடவர்கள் என இயேசு ஒவ்வொருவரையும் அழைக்கிறார். (வெளி 22:17) எல்லோரும் அழைக்கப்படுகிறார்கள். "இது நிறைவேறியது" என்ற வார்த்தைகள் குறிப்பாக ஆதியும் அந்தமுமாயிருக்கிறவரின் வார்த்தைகள், இந்த மகத்தான வாக்குத் தத்தங்களை தேவன் நிறைவேற்றுவாரா என்ற சந்தேகத்திற்கிடமின்றி உள்ளது தேவன் நிச்சயம் நிறைவேற்றுவார்.

ஆனால் தேவன் தனது பங்கைச் செய்யப்போவதுபோல் நாம் நமது பங்கைச் செய்ய வேண்டும் (வெளி 21:7) தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிபந்தனையுடனானவைகள் என்று மீண்டும் நாம் ஞாபகப்படுத்தப்படுகிறோம். பூமி முழுவதும் இரட்சிக்கப்படும் என்பது போல் எதுவுமில்லை (அதாவது எப்படியானாலும் எல்லோரும் பரலோகம் போவார்கள் என்பது) (வெளி 21:7) ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும சுதந்தரித்துக் கொள்ளுவான் நான் அவன் தேவனாயிருப்பேன் அவன் என் குமாரனாயிருப்பான் என்று இந்நூலில் திரும்பத்திரும்ப வரும் செய்தி பற்றிச் சொல்லுகிறது. இவ்வாசீர்வாதங்கள் அனைத்தையும் சுதந்தரிப்பதற்கு நாம் ஜெயங்கொள்ள வேண்டும் மேற்கொள்ளுதல் என்றால், பொல்லாங்கனாகிய பிசாசு எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப் போடுதலாகும் (எபே. 6 :16) நாம் பாவம் செய்வதை நிறுத்தவில்லையானால் நாம் நித்திய தண்டனையை சந்திக்க வேண்டும் (II பேதுரு 2:9-14) கிறிஸ்துவுக்குள்ளான கீழ்படிதலுள்ள விசுவாசம் இவற்றை நமக்குத் தரும் (எபே 6:16, யாக் 2:14-26; I யோவா. 5:1-5) இது நமக்கு ஒரு பலமான தூண்டுகோலாக இருக்கவேண்டும் (II பேது 3:14) சொல்வது போல ஆகையால் பிரியமானவர்களே, இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் கரையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

*E.Z.S.R* - *Jon* <u>Macon</u>

# புதிய ஏற்பாட்டு இரட்சிப்பின் திட்டத்தை சபை போதிக்கிறது

பெந்தெகொஸ்தே நாளிலே தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்படி மூவாயிரம் பேர் கீழ்ப்படிந்ததாக அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் சீமோன் பேதுரு இயேசுவின் உயிர்த்தெழுதலை உணர்ச்சிமிகு உச்சநிலையில் பிரசங்கித்து, "நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்." (அப்.2:36)

இந்த வார்த்தைகள் அவர்களை பலமாய் தாக்கியது, எனவே கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தாங்கள் குற்றவாளிகள் என உணர்ந்து, "நாங்கள் என்ன செய்யவேண்டும்" எனக் கேட்டார்கள். பேதுரு மறுமொழியாக, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றார். (அப்.2:38)

இவ்வதிகாரத்தின் பின்பகுதியில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றதை வாசிக்கிறோம். இரட்சிப்பிற்கு தங்கள் சுய விருப்பம் இல்லாமலேயே "அவர்கள் ஆட்கொள்ளப்பட்டனர்" எனும் நூதன உபதேசத்தை இவ்வசனப் பகுதி மறுக்கிறது. தங்கள் மனமாற்ற நிகழ்ச்சியில், இந்த மக்களுக்கு ஒரு ஆழமான உணர்வு உண்டாயிருந்தாலும், அதற்கான படிப்படியான நிறைவு அவர்களின் தீர்மானத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. சாட்சியங்களை ஏற்று தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது அவரவரின் சுய தீர்மானத்தைச் சார்ந்திருந்தது.

## சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்

ஒருவரின் அங்கத்துவத்தை ஏற்றுக் கொள்ள சபைக்கென தொகுக்கப்பட்ட கொள்கைமுறை என எதையும் கிறிஸ்துவின் சபையார் பேசுவதில்லை. கிறிஸ்தவனாக மாற எடுக்கப்படவேண்டிய சில குறிப்பிட்ட நடவடிக்கை (படி) களை புதிய ஏற்பாடு கொடுக்கிறது.

இப்படிகளை ஒருவர் ஏற்றுக் கொண்டு, செயல்படும் போது, அவர் கிறிஸ்தவனாகிறார், அதே செயலின்படி சபையின் அங்கமாகவும் மாறுகிறார். ஒருவர் சபையின் அங்கமாவதற்குரிய தகுதியைப் பெற இதற்கு மேலான ஒரு செயல் (கொள்கை) எதிர் பார்க்கப்படுவதில்லை.

சபை ஸ்தாபிக்கப்பட்ட முதல் நாளில், மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அந்நாள் துவக்கி இரட்சிக்கப்பட்ட அனைவரும் சபையிலே சேர்க்கப்பட்டு வந்தார்கள் (அப் 2:47) இவ்வசனத்தின்படி தேவனே சபையில் அவர்களைச் சேர்த்துக் கொள்கிறார். ஆதலால், இம்மாதிரியைப் பின்பற்றும்போது, சபையில் நாம் வாக்களித்து ஒருவரையும் சேர்த்துக் கொள்வதுமில்லை, சில தொகுப்பட்ட ஒரு கொள்கை பாடத்தை படிக்க வைப்பதன் மூலம் அங்கம் வகிக்க நிர்பந்தப்படுத்துவதுமில்லை. இரட்சகருக்கு கீழ்படிவதைக் காட்டிலும் மேலான எதையும் கோர நமக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

## கிருபையினால் இரட்சிப்பு.....

நாம் பாவம் மிகுந்தவர்களாயிருப்பதால், சுயமாக நாம் இரட்சிப்பைப் பெற இயலாது. தேவனுடைய கிருபையினால் நமக்கு இரட்சிப்பு வருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல” (எபே.2:8,9)

## விசுவாசத்தைக் கொண்டு...

கிருபையினாலே... விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப் பட்டோம். கிருபை தேவனுடைய பகுதி தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிற, கிரியையோடு கூடிய விசுவாசத்தையே அவர் அங்கீகரிக்கிறார் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் இரட்சிப்பை சம்பாதிப்பதில்லை. அது தேவனுடைய வரம் (ஈவு) இருப்பினும், இந்த வாக்குத்தத்தமான ஈவைப் பெற வேண்டுமானால் அதற்கான நிபந்தனைகளையும் சந்திக்காமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது.

தொடரும்...

# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001. | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560084 | P.R.Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum- 695 034. | P.K.Varghese |

**Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures**

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,

அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்

விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**

த.பெ.எண்–27, காங்கேயம் – 638 701.

தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**